## நல்ல நல்ல குடும்பங்கள்

(தொடர்ச்சி) வாசிக்க: யோவான் 2:1-12

*"பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்;*
*என் வழிகளைப் பின்பற்றுகின்றோர் நற்பேறு பெற்றோர்" (நீதி 8:32)*

இனிய இல்லம் உருவாக்கும் ஒரு சில வழிமுறைகளை கானாவூர்க் கல்யாண வைபவத்திலிருந்து நேற்று கற்றோம். இன்றும் தொடர்ச்சியாய்...

*r மூத்தோரின் வழிகாட்டல்*

"இயேசுவின் தாயும் அங்கே இருந்தாள்" (வச 1) என்றுதான் இச்சம்பவம் துவங்குகிறது. பல்லாண்டுகள் கர்த்தரோடு நடந்து வந்த அவளைப் போன்றொருவர் அங்கிருந்தது என்னே ஆசீர்வாதம்! மூத்தோரை மதியாத தலைமுறை இது. படிப்பைப் பக்குவமென்று தவறாய் எண்ணிவிடுகின்றனர் நமது இளைஞர். யோபுவுக்குப் பில்தாத் கொடுத்த ஆலோசனை பழமையாகாதது: "நீர் முந்தின தலைமுறையாரிடம் விசாரித்து, அவர்கள் முன்னோர்களின் செய்தியை ஆராய்ந்துபாரும். நாம் நேற்று உண்டானவர்கள், ஒன்றும் அறியோம். அவர்கள் உமக்கு உபதேசித்து உமக்குத் தெரிவித்து, தங்கள் இருதயத்திலிருக்கும் நியாயங்களை வெளிப்படுத்துவார்கள் அல்லவோ?" (யோபு 8:8-10).

வேலைக்காரரை இயேசுவிடம் போக நடத்தியதே மரியாள்தான் (வச 5). இன்று அர்த்தமேயில்லாத பாரம்பரியங்கள் பலவுண்டு என்பது உண்மைதான். ஆனால் மூத்தோரிடம் உட்கார்ந்து பேசும்போது நாம் தெளிவு பெறுகிறோம். பெற்றோரிடமும் பெரியவரிடமும் ஆலோசனை கேட்கத் தயங்குவதாலேயே இளைஞர் பலர் சில பிரச்னைகளைச் சுமந்துகொண்டேயிருக்கின்றனர்.

*r எதிர்பார்ப்பில் உறுதி*

திராட்ச ரசத் தட்டுப்பாட்டை மாற்றுவேடத்தில் வந்த ஆசீர்வாதமென்றுதான் சொல்லவேண்டும்! பிந்திய ரசம் முந்தியதைவிட ருசி! (வச 10). நமது குடும்பம் ஒவ்வொன்றின் மீதும் ஆண்டவர் அக்கறைகொண்டுள்ளார். அவர் ஒருவரையும் அசட்டை செய்வதில்லை. குடும்பங்களை ஆசீர்வதிக்க நீட்டப்பட்ட அவரது கரங்கள் ஒருபோதும் மடக்கப்படவில்லை (ஆதி 1:27,28). நண்பரே, நம்பிக்கையிழக்க வேண்டாம். உங்கள் வேண்டல்களையும் கண்ணீரையும் அவர் கவனிக்கிறார். உங்கள் குடும்பத்தினரின் சிதைந்த உறவுகளைச் சீர்ப்படுத்துவார். கானாவூரில் இவ்வற்புதத்தை இயேசு "மூன்றாம் நாள்" செய்தார். நம்பிக்கையின்மை நிறைந்த இரு நாட்களுக்குப் பிறகு வரும் உயிர்த்தெழுதலையும், புதுவாழ்வையும் மூன்றாம் நாள் குறிக்கும் (லூக் 24:21). உங்கள் மூன்றாம் நாள் இதோ உதயமாகப் போகிறது (ஓசி 6:2).

*r தேவப்புகழ் பரவுதல்*

இவ்வற்புதத்தின் நோக்கத்தை வசனம் 11 இரத்தினச் சுருக்கமாய்க் கூறுகிறது: "அவரது சீடர்கள் அவரிடம் விசுவாசம் வைத்தார்கள்." அவர்கள் ஏற்கனவே விசுவாசிகள்தாம். ஆனால் இப்பொழுது அவர்களது விசுவாசம் இன்னும் பலப்பட்டு, ஆழப்பட்டது. இயேசுவின் இரண்டாவது அடையாள அற்புதமும் (யோ 4:46-54) ஒரு குடும்பத்திற்காகவே செய்யப்பட்டது. இறைவன் தமது திட்டங்களையும் நோக்கத்தையும் நிறைவேற்ற இம்மண்ணுலகில் வைத்துள்ள இயக்கங்கள்தான் குடும்பங்களாகும். குடும்பமெனும் வட்டமே கிறிஸ்துவைப் பிரதானமாய்க் கடத்தும் கம்பியாம். நல்ல குடும்பங்கள் நல்ல சமுதாயத்தையும், நல்ல சமுதாயங்கள் நல்ல நாட்டையும், நல்ல நாடுகள் நல்ல உலகையும் உருவாக்கும்!